**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM,(MAHILA COURT),COIMBATORE

S.C.No. 109 of 2019

| Name of Witness | PW-13 ஸ்ரீனிவாசன் | Caste | |
|---|---|---|---|
| Father / Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Cell | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.05.2022.

**முதல் விசாரணை-**

நான், கோயமுத்தூர், ஆவாரம்பாளையம், கதவுஎண் 73, அரசமர தெரு எண் 3, என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 25.01.2019 அன்று நான் கம்பெனி வேலையாக இளங்கோ நகர் வழியாக சென்று கொண்டிருந்த போது கூட்டமாக இருந்தது. எதிரியினுடைய மனைவியை கொன்றுவிட்டார்கள் என்று சொன்னார்கள். நான் அந்த இடத்தை விட்டுக் கிளம்பிவிட்டேன்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

கடந்த 25.01.2019 காலை 9.30 மணியளவில் எதிரி வீட்டிற்கு நானும், எனது நண்பர் மணிகண்டனும், எதிரியிடம் பணம் கேட்க சென்றபோது அவரது மனைவி வீட்டில் துணி காயப்போட்டுக் கொண்டிருந்தார் என்றும், அவரது வீட்டில் எதிரியும், அவருடைய மனைவியும் மட்டும்தான் இருந்தார்கள் என்றும், எதிரி 2 நாட்கள் கழித்து பணம் தருவதாக கூறியதன் அடிப்படையில் திரும்பி வந்ததாகவும் கூறிவிட்டு 2 நாட்கள் கழித்து எதிரி அவருடைய மனைவியை கொலை செய்ததாக கூறி தாமாகவேசென்று மணிகாரர் முன்பாக சரணடைந்தார் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**கு.வி -** இல்லை.